# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2248/38 - 2021 ඔක්තෝබර් මස 06 වැනි බදාදා - 2021.10.06

*2248/38 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 06 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

ச. அ. இல. : PS/CSA/00/1/14/28

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதியுத்தமராம் சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களினால்**

(முத்திரை)

**கோட்டாபய ராஜபக்ஷ**

1. **கௌரவ தம்மிக்க பிரியந்த சமரக்கோன் ஜயவர்தன**
   **உயர்நீதிமன்ற நீதியரசர்**
2. **கௌரவ கேமா குமுதினி விக்கிரமசிங்க**
   **உயர்நீதிமன்ற நீதியரசர்**
3. **கௌரவ ஆர்.எம்.சோபித்த ராஜகருணா**
   **மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்**

வாழ்த்துக்கள்!

1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தப்பட்ட, தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய 2021 சனவரி மாதம் 28 ஆந் திகதிய அதிகாரப் பத்திரத்தின் மூலம் விசேட சனாதிபதி ஆணைக்குழுவொன்று தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும்,

இந்த விசாரணை ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளை பயனுள்ள முறையில் நிறைவேற்றுவதற்கு ஆணைக்குழுவிற்கு மேலதிக அதிகாரங்கள் தேவையென ஆணைக்குழுவினால் மேற்குறித்த சட்டத்தின் 7(2) ஆம் பிரிவின்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதனாலும்,


1A - G 35056 — 380 (2021/10)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*1978 ஆம் ஆண்டு 4 ஆம் இலக்க விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தப்பட்ட தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டு 7ஆம் இலக்க விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுச்சட்டத்தின் 7(2) ஆம் பிரிவின் (ஊ) உபபிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் இந்த ஆணைக்குழுவிற்கு என்னால் மேலும் கையளிக்கப்படுவதாக இத்தால் அறிவிக்கின்றேன்.*

*உங்களுடைய நேர்மை, விவேகம், ஆற்றல் மற்றும் விசுவாசம் ஆகியவற்றில் பெரும் உறுதியும், நம்பிக்கையையும் வைத்து, மேற்குறித்த அதிகாரப்பத்திரத்தின் மூலம் நிறுவப்பட்டுள்ள விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் மேற்குறித்த விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தேவைப்படும் சகல நடவடிக்கைகளையும் எடுக்குமாறு இத்தால் தங்களுக்கு விதிக்கின்றேன்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலச்சினையின் கீழ் இரண்டாயிரத்து இருபத்தியோராம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 06 ஆந் திகதி கொழும்பில் அளிக்கப்பட்டது.*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

**பீ. பி. ஜயசுந்தர,**
*சனாதிபதியின் செயலாளர்.*

*10-258*